**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.519/2022 P.W.7**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முகமது நசீம் | த–பெ | |
| ஊர்: | : | மதுரை | சமயம்: | |
| வயது: | : | /2025 | வட்டம்: | |
| தொழில்: | : | உதவி மருத்துவர் | மாவட்டம் | மதுரை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.09.2025**

**எதிரி ஆஜர் .**

-----------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் மதுரையில் வசித்து உதவி மருத்துவராக பணி செய்து வருகிறேன். கடந்த 09.06.2016 அன்று மதுரை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது சோமநாதபுரம் காவல் நிலைய குற்ற எண்.51/16 என்ற விபத்து வழக்கில் இறந்து போன சின்னையா என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக காவல் ஆய்வாளர் பொறுப்பு அவர்கள் வழங்கிய வேண்டுகோள் கடிதத்தை பெற்றுக்கொண்டு சவக்கிடங்கில் வைத்து 12.10 மணிக்கு அன்றைய தினம் மேற்படி பிரேதத்தின் பிரேத பரிசோதனையை ஆரம்பித்தேன். அவரின் அங்க மச்ச அடையாளங்களை பதிவு செய்தேன். உடல் முழுவதும் அவருக்கு விறைப்பு தன்மை இருந்தது. வெளிப்புற காயங்கள் பின்வருமாறு

1) கிழிந்த காயம் 6 *3 *1 செ.மீ நீளமுள்ள காயம் இடது பக்க பின்னந்தலையில் இருந்தது.
2) வலது கன்னத்தில் 12*6 தசை ஆழம் பகுதியில் கிழிந்த காயம் தென்பட்டது
3) வலது தோள்பட்டையில் 5*2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் தென்பட்டது
4) கிழிந்த காயம் வலது முழங்கால் கீழ் பகுதியில் 5*2 செ.மீ அளவுள்ள எலும்பு வரை ஆழம்
5) 5*3 செ.மீ தசை வரை ஆழம் வலது கால் பகுதியில் கிழிந்த காயம் தென்பட்டது
6) வலது கீழ் தொடை பகுதியில் எலும்பு உடைந்து தசை பகுதி முழுவதும் கன்றிய காயங்கள் தென்பட்டது.

தலைப்பகுதியை கூராய்வு செய்ததின் கன்றிய காயமானது 15*10 செ.மீ அளவுள்ள காயம் வலது பக்க முன் மற்றும் பக்கவாட்டு பகுதியில் தலைப்பகுதியின் அடிப்பகுதியில் தென்பட்டது.

மூளை சவ்வின் வெளிப்புறத்தில் இரத்தமானது 10**5*1 அளவுள்ள வலது பக்கவாட்டு முன் பகுதியில் தென்பட்டது.

மூளை பகுதியில் இரத்தமானது பரவலாக கசிந்து இரண்டு பக்க கதுப்புகளிலும்

காணப்பட்டது.

இதர பகுதிகளில் கண்டறிபப்பட்டது.

1) வயிறு , மார்பு, நுரையீரல்,ஆகியவை காலியாக காணப்பட்டது.

2) இதயத்தை சுற்றியுள்ள அறையில் 15 மி.லி வைக்கோல் நிற வண்ணத்திரவம் தென்பட்டது.

3) இதயத்தின் வலது பக்க அறையில் நீர்ம நிலையில் இரத்தமும் இடது புற அறை காலியாக இருந்தது.

4) இதயத்திற்கான இரத்த நாளமானது சாதாதரணமான நிலையில் இருந்தது

5) நுரையீரல் பகுதி இரத்தம் செறிந்த நிலையில் காணப்பட்டது

6) மூச்சு குழாய் சாதாரண நிலையில் இருந்தது

7) நாவடி எலும்பு இயல்பு நிலையில் இருந்தது

8) இரைப்பையில் 100 மி.லி அளவில் நெடியற்ற பழுப்பு நிற நீர்மம் தென்பட்டது.

9) இரைப்பையின் உட்புற சவ்வு சாதாரண நிலையில் இருந்தது

10) கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் இரத்தம் செறிந்த நிலையில் காணப்பட்டது

11) சிறுகுடலில் 20 மி.லி அளவில் பித்தம் தோய்ந்த நிலையில் நீர்மம் நிலையில் உட்புற சவ்வு தோய்ந்த நிலையில் இருந்தது.

இறுதி கருத்து

மேற்படி இறந்த நபர் பலதரப்பட்ட காயங்களால் இறந்திருக்கலாம் என்று நான் சான்று அளித்தேன்.

**மேற்படி பிரேத பரிசோதனை சான்று அசாஆ 5.** ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

அரசு தரப்பில் விசாரணை

மேற்படி காயம் பட்டு இறந்து போன நபர் விபத்துக்குள்ளாகும் போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.09.16 13:16:43 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி